# பிள்ளைகளின்
# மலரும் படைப்பாற்றல்

**பிள்ளைகளின் படைப்பாற்றல், இயற்கையை மையமாகக்கொண்டு வளர்க்கப்படும்போது சிறப்பாக மேம்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எமது 'மலரும் படைப்பாற்றல்' திட்டத்தின் வாயிலாகப் பிள்ளைகளை இலைகள், விதைகள், பூக்கள் ஆகியவற்றோடு வெளியில் காணப்படும் பிற இயற்கை வளங்களை ஆராயச் செய்கிறோம். இதன் காரணமாகப் பிள்ளைகளது கற்பனை மேம்பட்டுப் பல கலைப்படைப்புகள் உருவாகின்றன.**

**இந்த நேரடி அனுபவம் பிள்ளைகளிடையே படைப்பாற்றலைத் தூண்டுவது மட்டுமல்லாமல் மொழி வளர்ச்சியையும் வலுப்படுத்துகிறது. தங்கள் கலைப்படைப்பைச் செய்துமுடித்த பிறகு, பிள்ளைகள் அவற்றின் அடிப்படையில் உருவாக்கிய கதைகளைச் சக நண்பர்களிடம் பகிர்ந்து கொள்கிறார்கள்; அவர்களுடன் உரையாடல்களில் ஈடுபடுகிறார்கள். இதனால், பிள்ளைகள் தாங்கள் கற்ற புதிய சொற்களைப் பயன்படுத்தித் தன்னம்பிக்கையுடன் தங்களது கருத்துகளை வெளிப்படுத்த முற்படுகிறார்கள்.**

- ***மொழித்திறன் மேம்பாடு***: தமிழில் கதை சொல்வதன் வாயிலாகவும் உரையாடுவதன் வாயிலாகவும் பிள்ளைகளின் மொழித்திறன் இயல்பாக மேம்படுகிறது.
- ***படைப்பாற்றல், கற்பனைத் திறன் வெளிப்பாடு***: இலைகள், மலர்கள், கற்கள் போன்ற இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்திப் பிள்ளைகள் கற்பனைத்திறனுடன் கலைப்படைப்புகளை உருவாக்குகிறார்கள்.
- ***தன்னம்பிக்கையும் தன்னிலை ஆளுமையும்:*** இந்நடவடிக்கைகள் பிள்ளைகளின் தன்னம்பிக்கையையும் வலுவான தனித்துவத்தையும் வளர்க்க உதவுகின்றன.
- ***ஆசிரியர்களின் பங்கு***: ஆசிரியர்களின் கனிவான வழிகாட்டுதலால் கற்றல் மகிழ்வுறு அனுபவமாகிறது.

© PCF Sparkletots

## கற்றல் நோக்கங்கள்

மொழித்திறனை
மேம்படுத்துதல்

## வளங்கள்

இலைகள், விதைகள், மலர்கள்,
பிற இயற்கை வளங்கள்

## செயற்பாடுகள்

கலைப்படைப்பு
உருவாக்குதல்



கதை சொல்லுதல்



உரையாடுதல்



## விளைவுகள்

மொழித் திறன் மேம்பாடு, படைப்பாற்றல்,
கற்பனைத் திறன் வளர்ச்சி, தன்னம்பிக்கை,
தன்னிலை ஆளுமை

© PCF Sparkletots

# வெளிப்புறக் கற்றல் நடவடிக்கை (புத்தார்வங்கொள்ளுதல்)




பிள்ளைகள் வெளிப்புறத்தில் தாங்கள் பார்த்த மரம், பூச்சிகள், பூக்கள், பறவைகள் முதலியவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்தவற்றைப் புத்தார்வத்துடன் கூறினார்கள்.







© PCF Sparkletots

# வெளிப்புறக் கற்றல் நடவடிக்கை
# (இணைந்து சேகரித்தல்)






**பிள்ளைகள் வெளிப்புறத்தில் தங்கள் நண்பர்களுடன் சேர்ந்து காய்ந்த இலைகள், குச்சிகள், பூக்கள் முதலியவற்றைச் சேகரித்தார்கள்.**







© PCF Sparkletots

# ஒன்று கூடினோம்; கலந்துரையாடினோம்



பிள்ளைகள் ஆசிரியருடன் சேர்ந்து தாங்கள் சேகரித்தவற்றைக்கொண்டு என்ன செய்யலாம் என்று கலந்துரையாடினார்கள்.

ஆசிரியர், நான் பட்டாம்பூச்சி செய்யப் போறேன்.



பிள்ளைகள் ஆசிரியரிடம் தாங்கள் வெளிப்புறத்தில் பார்த்த உயிரினங்கள், பூச்சிகள், மரங்கள், பூக்கள் முதலியவற்றைப்போலக் கலைப்படைப்பை உருவாக்கலாம் என்று

ஆசிரியர் பிள்ளைகளிடம் தான் செய்த மாதிரி படைப்புகளைக் காட்டி, அவர்களுக்குப் பிடித்த கலைப்படைப்பினைத் தேர்ந்தெடுக்க உதவினார்.



© PCF Sparkletots

# படைப்பாற்றலின் வெளிப்பாடு
## (கலைப்படைப்பு உருவாக்குதல்)

நான் இலைகளால் பூச்செடி செய்யப் போறேன்.

அதோ பாரு, அழகான பூ!





ஆசிரியர், சின்ன இலையைப் பயன்படுத்தப் போறேன்.





**பிள்ளைகள் கருப்பொருளையொட்டித் தங்களுக்குப் பிடித்த கலைப்படைப்பினை உருவாக்கினார்கள்.**



© PCF Sparkletots

# படைப்பாற்றலின் வெளிப்பாடு
## (கதை சொல்லுதல்; உரையாடுதல்)

நான் இலைகளை வட்டமாக வெட்டிக் கம்பளிப்பூச்சி செய்தேன்.



இலைகள்,–குச்சிகள் முதலியவற்றைப் பயன்படுத்திப் பட்டாம்பூச்சி செய்தேன்



குட்டி இலையை வைத்து தோட்டம் செய்தேன்.





**பிள்ளைகள் தங்கள் கலைப்படைப்பைப்பற்றி ஆசிரியருடன் உரையாடினார்கள்.**



© PCF Sparkletots

# தன்னம்பிக்கையும் கற்பனைத்திறனும்

பிள்ளைகள் வகுப்பறையில் தாங்கள் உருவாக்கிய கலைப்படைப்பினைக்கொண்டு தன்னம்பிக்கையுடன் கதை சொன்னார்கள். மேலும், கலைப்படைப்பில் பயன்படுத்தியப் பொருள்களின் பெயர்களைத் தமிழில் கூறினார்கள்.

கம்பளிப்புழு





பட்டாம்பூச்சி





தவளை







தட்டான்பூச்சி



© PCF Sparkletots